## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தற்ற 03 கொல்களங்கள் காணி கட்டடங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,423,096 இனால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | மூலதனச்செலவு என்பதனால் சொத்தாக்கப்பட்டது. நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபைக்கு உரித்தற்ற சொத்துக்கள் நீக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 126 (III) (ஊ) | ரூபா 130,100 பெறுமதியான 65 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 08 விளம்பரப் பெயர் பலகைக்கான கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளது. | பிரதேச சபை சட்டத்திற்கமைய அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டில் ஒவ்வொரு வருமானங்களினதும் செலவீனங்களினதும் அதிகரிப்பு குறைவுகள் தனித்தனியாக ஆராயப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில் லை | பிரதேச சபை நிதி நிருவாக விதிகளுக்கமைய வருமானச் செலவினங்களின் அதிகரிப்பு, குறைவுகளுக்கான காரணங்கள் தனித்தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணங்கள் இலக்கம் 371 | சபையினால் வழங்கப்பட்ட ரூபா.314,878 முற்பணங்கள் தீர்வு செய்யப்படாமல் இருந்தது. | முற்பணங்களைத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக் கமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணங்கள் இலக்கம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 1,653,205 ஆன 40 பிடிபணங்கள், கேள்வி வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | மீளளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | மீளளிக்கப்பட வேண்டிய தொகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக் கமைவாக உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி - 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | இணையத்தள வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் இணைய சேவைகள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 1981.12.09 ஆம் திகதிய 161 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 53 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 244,400 சீருடைக் கொடுப்பனவு வழங்கப்பட்ட போதிலும் குறித்த உத்தியோகத்தர்கள் சீருடையை அணிந்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு அலுவலகக் கடமை நேரத்தில் சீருடை அணிவதை சீராகக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய சீருடைக் கொடுப்பனவு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சீருடை அணிவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஏல விற்பனை இடம்பெறவில்லை. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய விற்பனை மீதான வரிகள் அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,601,710 இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,347,285 ஆக தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,614,096 | 4,902,928 | 10,451,561 | 674,390 | 4,789,809 | 7,818,398 |
| வாடகைகள் | 19,191,490 | 20,668,546 | 322,575 | 19,958,110 | 16,211,489 | 322,575 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,577,600 | 6,541,541 | 9,000 | 4,494,100 | 4,873,396 | 48,317 |
| ஏனைய வருமானம் | 136,101,867 | 73,007,647 | 148,915,043 | 115,379,590 | 136,701,293 | 213,421,162 |
| | 163,485,053 | 105,120,662 | 159,698,179 | 140,506,190 | 162,575,987 | 221,610,452 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 162,575,986 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 105,120,661 ஆக குறைவடைந்துள்ளமையால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டு வருமானம் குறைவடைந்துள்ளதுடன் பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்கிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு கடந்த 05 வருடங்களாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 10,451,561 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வீதவரி நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.4 வாடகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | வாடகை நிலுவை ரூபா 14,000 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையானது அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாடகை நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறைச்சி கடை வாடகை நிலுவை மற்றும் தண்டம் ரூபா 356,891 பெறுமதியானது கடந்த 05 வருடத்திற்கு மேலாக சபையினால் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இறைச்சிக்கடை வாடகைப்பணம் பெறுவதற்கு உரியவருடன் தொடர்பு கொள்ள முடியாமலுள்ளது. | வாடகை நிலுவைகளினையும் தண்டப்பண நிலுவைகளினையும் உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,710,290 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தது. | பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 137,336,990 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தது. | இறுதிக்கணக்கிலிருந்து வருமதி மீதி சீர் செய்யப்படும். | முத்திரைக்கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் உருவாக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும 26 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஏனைய உப விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | சட்டத்திற்கமைய உப விதிகள் உருவாக்க உரிய நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 26 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | உபவிதிக்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் மக்களுக்கு சுகாதாரப் பிரச்சினை காணப்படுவதுடன் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | கட்டணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய குப்பைகளை அகற்றுவதற்கு வினைத்திறனாக நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவகற்றல் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்கள் அனைவருக்கும் இவ்வருடத்திற்கான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. | சுகாதாரத் தொழிலாளர்களுக்குரிய மருத்துவ பரிசோதனைகள் உரிய காலத்தில் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) சுற்றுச்சுழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவுகள் அகற்றும் பிரதேசத்தில் மருந்து விசுறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திண்மக் கழிவுகள் அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | உப அலுவலகத்தின் ஆதனவரி இடாப்பு 1995 ஆம் ஆண்டில் அழிவடைந்துள்ளபோதும் ஆதனவரி அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இடாப்பு தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | ஆதனங்களுக்கு மீள் மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கடந்த 04 வருடங்களாக ரூபா 13,197,084 செலவீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நீர்வேலி தரம் பிரித்தல் நிலையம் 2019 ஆம் ஆண்டு ரூபா 1,546,524 மேலதிக செலவீடு செய்யப்பட்ட போதிலும் கொள்கலத்தினை வினைத்திறனாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவகற்றலின் போது வருமானம் பெறப்பட வேண்டும். | தரம் பிரித்தல் நிலையத்தினை வினைத்திறனாக செயற்படுத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) 2019 ஆம் ஆண்டு 67 கட்டட அனுமதி விண்ணப்பங்களுக்கு சபையினால் உரிய அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் விண்ணப்பதாரிகளால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் கட்டட அனுமதி வழங்கப்படும். | பிரதேச சபைச் சட்டத்திற்கமைய உரிய காலத்தில் கட்டட விண்ணப்ப அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 36 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | மேற்குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2016 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த இறைச்சிக்கடைக்கான குத்தகை ரூபா 300,000 குத்தகை தாரரிடமிருந்து 03 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக வழக்கு நடைபெறுகின்ற போதும் இதற்கான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதி ஆண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கும் பொறுப்புக்கள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அனுமதியற்ற எல்லைச்சுவர் அமைத்தமை தொடர்பாக வழக்கு தொடரப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | அடுத்த நிதி ஆண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கும் பொறுப்புக்கள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | உலவிக்குளம் பிள்ளையார் கோவில் வீதி தொடர்பாக சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்த போதும் இதற்கான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | அடுத்த நிதி ஆண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கும் பொறுப்புக்கள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வாகனங்கள் சபைக்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதுவரை 05 வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளது. | வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. பெறுகை

### 4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டி 4.2 இல் குறிப்பிட்டதற்கு அமைவாக சேவைகளுக்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக பெறுகைத்திட்டம் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு செலவிற்கும் உண்மையான செலவுகளுக்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்படுகின்றது. | முத்திரைத் தீர்வை நீதிமன்ற தண்டப்பணம் அடுத்த நிதியாண்டிற்கு சேர்க்கப்பட வேண்டும் என்பதால் கிடைக்கப்பெறும் வருமானத்தில் செலவீனங்கள் மட்டுப்படுத்தபட்டதனால் பாதீட்டிற்கும் உண்மைக்கும் வேறுபாடு அதிகமாக உள்ளது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |